மேலதிக தகவலை பெறுவதற்காக
**www.ibsl.gov.lk**
வெப்தளத்தில் தொடர்பு கொள்ளவும்.

இலங்கை காப்புறுதிச் சபையினால் உருவாக்கப்பட்ட
பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

# காப்புறுதியைப் பற்றிக் கூடுதலான விபரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்



IBSL

## இலங்கை காப்புறுதிச் சபை

## இச் சிறு புத்தகம் பற்றி

இது நீங்கள் காப்புறுதி பற்றி விளங்கிக் கொள்வதற்கு உதவுவதற்கான ஓர் அறிமுக வழிகாட்டியாகும். இது காப்புறுதித் தொழிலின் வகைகள், காப்புறுதியின் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றியும் மற்றும் நட்டமொன்று ஏற்படுமிடத்து என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் உங்களுக்கு சில தகவல்களை தருகின்றது. நீங்கள் எமது www. ibsl.gov.lk இணையத்தளத்தில் கூடுதலான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## காப்புறுதி என்றால் என்ன?

காப்புறுதி என்பது தனிப்பட்ட ஆட்களும் தொழில் நிறுவனங்களும் ஆயுளின் நிச்சயமின்மைகள் சிலவற்றை பிறிதொரு உள்பொருளுக்கு தெரிந்த கொடுப்பனவிற்கு அதாவது கட்டுப்பணத்திற்கு கைமாற்றுவதற்கு முயற்சி செய்யும் ஓர் அபாய வாய்ப்பு கைமாற்றப் பொறிமுறையாகும்.

## அபாய வாய்ப்பு என்பது என்ன?

காப்புறுதியில் அபாய வாய்ப்பு என்பது "நட்டத்தின் நிச்சயமின்மை" ஆகும். காப்புறுதியில் அபாயவாய்ப்பு நிதி நியதிகளில் அளக்கப்படுகின்றது.

## காப்புறுதி வகைகள்

காப்புறுதியில் இரண்டு பிரதான வகைக் காப்புறுதிகள் அதாவது ஆயுட் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் உண்டு.

| ஆயுட் காப்புறுதி | பொதுக் காப்புறுதி |
|---|---|
| உங்களுடைய ஆயுளை எந்த எதிர்பாரா இடையூறுக்கும் எதிராக குறிப்பிட்டவொரு பணத்தொகை வரைக்கும் காப்புறுதி செய்கின்றது. (பணத்தொகை காப்புறுத்தப்பட்டது) | ஆயுட் காப்புறுதி வர்த்தகத்தினால் முனைவு செய்யப்படுபவற்றை விட ஏனைய நட்டங்களுக்கும் சேதங்களுக்கும் எதிராக உங்களைக் காப்புறுதி செய்கின்றது. |
| காப்பீட்டுக் காலம் வழக்கமாக ஓராண்டிற்கும் மேற்பட்டதாகும். இது முன்னரே நிர்ணயிக்கப்பட்ட கட்டுப் பணத்தொகையானது மாதாந்த அல்லது காலாண்டு அல்லது வருடாந்த அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுவதை வேண்டுகின்றது. | காப்பீட்டுக் காலம் வழக்கமாக ஓராண்டாகும். இது வழக்கமாக காப்புறுதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்னர் கட்டுப்பணம் செலுத்தப் படுவதை வேண்டுகின்றது. |

| காப்பீடு செய்யப்பட்டுள்ள அபாய வாய்ப்புகள் | காப்பீடு செய்யப்பட்டுள்ள அபாய வாய்ப்புகள் |
|---|---|
| * முதிர்வுக்குரிய முந்திய மரணம்<br>* இளைப்பாறலின் போதுள்ள வருமானம் | * ஆதன இழப்பு உதாரணம் களவெடுக்கப்பட்ட கார் அல்லது எரிந்த வீடு<br>* உங்களால் மூன்றாவது தரப்பினரொருவருக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்திலிருந்து எழுகின்ற பொறுப்பு<br>* ஓர் காயத்தினால் அல்லது நோயினால் ஏற்படுத்தப்படும் விபத்து மரணம் அல்லது இயலாமை. |
| **பிரதான பொருட்கள்** | **பிரதான பொருட்கள்** |
| (அ) பூரண ஆயுள்<br>(ஆ) ஆதார நிதி<br>(இ) காலவரையறை<br>(ஈ) முதலீடு இணைக்கப்பட்டது.<br>(உ) ஆண்டுத் தொகை/ஓய்வூதியங்கள் | (அ) மோட்டார்<br>(ஆ) தீ<br>(இ) சொந்த விபத்துக்கள்<br>(ஈ) மருத்துவமும் ஆரோக்கியமும்<br>(உ) கடல், விமானப்போக்குவரத்து, இடைப்போக்கு |

## காப்புறுதியும் சமூகமும்:

1. தனிப்பட்டவர்கள், தொழில் தாபனங்கள் தொழில் முயற்சிகள் நிறுவனங்கள், அமைப்புகளுக்கு காப்புறுத்தப்பட்ட அபாய வாய்ப்புகளின் தொடர்பிலான நட்டங்களுக்கு நட்டஈடு வழங்குவதன் மூலம் காப்புறுதியானது பொதுமக்களுக்கு உதவி புரிகின்றது.

2. காப்புறுதிக் கம்பனிகள் பல்வேறு அபாயவாய்ப்புத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் அவற்றிற்கு ஊக்கமளிக்கின்றனவென்பதுடன் விபத்துக்கள், நட்டங்களின் விளைபயன்களைக் குறைப்பதற்கும்கூட உதவி புரிகின்றது.

3. காப்புறுதியானது தொழிலின் வளர்ச்சிக்கும் வேலைகளை உருவாக்குவதற்கும் உதவி புரிவதற்காக நிதியங்களை வழங்குகின்றது. அரசாங்க பிணையங்களில் காப்புறுதி நிதியங்களின் முதலீடு இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கானவொரு நிதியங்களின் மூலமாகும்.

4. உள்நாட்டு வியாபாரத்திற்கும் வெளிநாட்டு வியாபாரத்திற்கும் நிதியளிப்பதற்கு வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் காப்புறுதிக் காப்பீடொன்றின் பாதுகாப்பை வேண்டுகின்றன.

5. நட்டமொன்று ஏற்படும் போது தமக்கு நட்டஈடு வழங்குவதற்கு காப்புறுதி கிடைக்கக்கூடியதாகவுள்ளதென்பதை காப்புறுத்தப்பட்டவர் ஒருவர் தெரிந்து கொள்ளுமிடத்து அவருடைய கவலை குறைவதோடு மன அமைதியும் ஏற்படுகின்றது.

6. வாய்ப்புள்ள நட்டங்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு நிதியங்கள் ஒதுக்கப்படத் தேவையில்லை.

7. காப்புறுதி இல்லாதவிடத்து தாங்கள் தாங்கிக் கொள்ள விரும்பாமலிருக்கக் கூடிய அபாயங்களை தொழில் முயற்சியாளர்கள் தாங்கிக் கொள்வதற்கு எடுத்துக் கொள்வார்கள்.

## காப்புறுத்தகு அக்கறை:

காப்புறுத்தப்பட்ட விடயத்தில் அல்லது ஆயுட் காப்புறுதியில் காப்புறுத்தப்பட்ட பொருளுக்கு அல்லது ஆயுளுக்கு ஏற்படும் நட்டம் அல்லது சேதம் உங்களுக்கு நிதி நட்டமொன்றை விளைவிக்குமென்பதன் மீது நீங்கள் அக்கறையுடையவராகவிருத்தல் வேண்டும்.

### மிக உயர் நம்பிக்கை:

ஓர் காப்புறுதி ஒப்பந்தம் என்பது மிக உயர் நன்னம்பிக்கையுடனான ஒப்பந்தமாகும். காப்புறுதிச் சொந்தக்காரராக நீங்கள் காப்புறுதிப் பத்திரமொன்றை வாங்கும் போது சகல பொருண்மையான விடயங்களையும் தெரிவித்தல் வேண்டும். எந்த பொருண்மையான விடயத்தையும் நீங்கள் தெரிவிக்கத் தவறுமிடத்து காப்புறுதிப் பத்திரமானது செல்லுபடியற்றதாகலாம்.

### அண்மிய காரணம்:

'அண்மிய காரணம்' என்ற கோட்பாடு நட்டமானது காப்புறுத்தப்பட்ட இன்னல் ஒன்றினால் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் சரி அல்லது நட்டமானது விலக்கப்பட்ட (காப்புறுத்தப்படாத) இன்னல் ஒன்றினால் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் சரி நிதிநட்டத்தை அறவிடுவதை நிலை நாட்டுவதற்கு உதவுகின்றது. நீங்கள் முகம் கொடுத்த நிதி நட்டமொன்றை காப்புறுதிக் கம்பனியொன்றிலிருந்து நீங்கள் அவிடுவதற்கு முன்னர் அண்மிய காரணமாக அறியப்படும் காரணத்தை ஆய்ந்தறிந்து கொள்வது அவசியமானதாகும்.

### நட்டஈடு:

இது நட்டமானது பண நியதிகளில் நட்டஈடானது அளவிட்டு காண்பிக்கப்படக்கூடிய ஆதனமொன்றின் பெளதிக சேதத்திற்கு மட்டுமே ஏற்புடைத்தானதாகும். நீங்கள் காப்புறுதிப்பத்திரமொன்றிலிருந்து 'இலாபம்' சம்பாதிக்க முடியாது. நீங்கள் நட்டமொன்றினால் பாதிக்கப்படுமிடத்து காப்புறுதிக் கம்பனியானது நட்டம் ஏற்படுவதற்கு முன்னர் நீங்கள் இருந்த நிலைக்கு உங்களை வைத்திருப்பதற்கு உங்களுக்கு பணத்தை வழங்கும் அல்லது நட்டஈடு செய்யும்.

### பங்களிப்பு:

குறிப்பிட்ட ஆதனமொன்றைப் பாதுகாப்பதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதிப்பத்திரங்களை வாங்குவதற்கு நீங்கள் கட்டுப்படுத்தப்படவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதிப்பத்திரங்களை நீங்கள் வாங்கினால் சம்பந்தப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் கொடுபடத்தக்க பணத்தொகையை உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்படுமிடத்து காப்புறுதிகளின் விகிதத்தின் பிரகாரம் பங்களிப்புச் செய்யும்.

**கடன் பற்றுரிமை மாற்றீடு:**

ஆளொருவர் கவனயீனமாகவிருந்து உங்களுடைய ஆதனத்திற்கு நட்டமொன்றை ஏற்படுத்துமிடத்து அவர் நட்டத்திற்கு பொறுப்பானவராக்கப்படலாம். நட்டமானது காப்புறுதிப்பத்திரமொன்றின் கீழ் அறவிடப்படுகின்ற போதிலும் கவனயீனமான ஆளிடமிருந்து அறவீட்டைச் செய்யும் உரிமை உங்களுக்கு உண்டு. எனினும் கடன் பற்றுரிமை மாற்றீட்டுக் கோட்பாட்டின் கீழ் உரிமைக் கோரிக்கை கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் காப்புறுதிக் கம்பனியினால் கவனயீனமான ஆளிடமிருந்து அறவிடுவதற்கான உங்களுடைய உரிமையானது எடுத்துக் கொள்ளப்படும்.

## நான் எங்கேயிருந்து காப்புறுதிப் பொருளொன்றைப் பெற்றுக் கொள்ளலாம் ?

நீங்கள் காப்புறுதிப் பத்திரமொன்றை பின்வரும் நிறுவனங்கள்/ஆட்கள் மூலமாக வாங்கலாம்:–

* நேரடியாக காப்புறுதிக் கம்பனிகளிலிருந்து ;
* நியமிக்கப்பட்ட காப்புறுதி முகவர்கள் மூலமாக;
* உத்தரவுச் சீட்டுப் பெற்ற காப்புறுதித் தரகர்கள் மூலமாக; அத்துடன்
* காப்புறுதிக் கம்பனிகளுடன் வங்கிக் காப்புறுதி ஒழுங்குகளை வைத்திருக்கும் வங்கித் தொழில் நிறுவனங்களிலிருந்து.

## காப்புறுதிப் பத்திரமொன்றை வாங்கும் போது பயனுள்ள குறிகாட்டும் விடயங்கள்:

* பொருள் அம்சங்கள், நிலைமைகள், அனுகூலங்கள், மட்டுப்பாடுகள், விலக்களிப்புகளை உள்ளடக்கிய காப்புறுதிப்பத்திரத்தை/காப்புறுதித் திட்டத்தை விளங்கிக் கொள்ளுதல்.
* கொடுபடத்தகு கட்டுப்பணத்தொகை அல்லது பங்களிப்பு தாங்கிக் கொள்ளக்கூடியதாவென்பதை உறுதிப்படுத்தவும்.
* எடுத்துக் கொள்ளப்பட்ட காப்பீட்டுத் தொகை போதியது என்பதையும் அது உங்களுடைய தேவைகளுக்கு பொருத்தமானது என்பதையும் உறுதிப்படுத்தவும்.
* பதிவு பெற்ற முகவர்களுடன் / உத்தரவு பெற்ற தரகர்களுடன் அல்லது நேரடியாக காப்புறுதிக் கம்பனியுடன் மட்டும் கையாளலை மேற்கொள்ளவும்.
* காப்பீட்டுக் காலத்தையும் கட்டுப்பணத்தொகை செலுத்த வேண்டிய காலத்தையும் கண்காணிக்கவும்.

## கோரிக்கையொன்றை எவ்வண்ணம் செய்யலாம்?

* நீங்கள் நட்டம் அல்லது சேதம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்காக உங்களுடைய காப்புறுதிப்பத்திரத்தை அல்லது சான்றிதழைப் பார்வையிடவும்.
* நிகழ்வைப்பற்றி உங்களுடைய காப்புறுதிக் கம்பனிக்கு முடிந்தவரை விரைவாக அறிவித்து விட்டு உங்களுடைய உரிமைக் கோரிக்கைக்கு ஆதாரமளிப்பதற்குத் தேவைப்படும் ஆவணங்கள் பற்றிய ஆலோசனையை நாடிப் பெற்றுக் கொள்ளவும்.
* நீங்கள் ஒத்துழைப்பு வழங்கி உங்களுடைய காப்புறுதிக் கம்பனியினால் கோரப்படும் சகல தகவல்களையும் முழுமையாகயும் செம்மையாகவும் வழங்கவும். பிழையான அல்லது அரைகுறையான தகவல்களை வழங்குவது உங்களுடைய உரிமைக் கோரிக்கையை சீர் முறைப்படுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்தும்.
* சகல ஆவணங்களினதும் பிரதிகளையும் பதிவேடுகளையும் (உ.ம்.செலவுச் சிட்டைகள், அறிக்கைகள், கடிதத் தொடர்பு) பாதுகாப்பாக வைத்திருக்கவும். அத்துடன்
* உரிமைக்கோரிக்கை தீர்வு செய்யப்படும்வரை நீங்கள் உங்களுடைய காப்புறுதிக் கம்பனியுடன் கிரமமாகத் தொடர்பை வைத்திருக்கவும். முன்வைப்பானது உங்களுடைய எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாதவிடத்து நீங்கள் உங்களுடைய காப்புறுதிக் கம்பனியுடன் இணக்கப் பேச்சவார்த்தை நடத்தலாம். இரண்டு தரப்பினர்களும் நன்னம்பிக்கையுடன் பேச்சுவார்த்தையை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## முறைப்பாடுகளை தீர்வு செய்வதற்கான வழிவகைகள்:

நீங்கள் உங்களுடைய காப்புறுதிக் கம்பனியுடன் மனவருத்தமடைந்தவராக இருக்குமிடத்து அல்லது நீங்கள் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டதாக உணருமிடத்து நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முன்னர் நிவாரணத்தைப் பெறுவதற்கு பலவழிவகைகள் உண்டு.

நீங்கள் உங்களுடைய முறைப்பாட்டை காப்புறுதிக் கம்பனியின் முறைப்பாடுகள் பிரிவில் அல்லது காப்புறுதிக் கம்பனியின் பொறுப்புள்ள உத்தியோகத்த ஒருவருக்கு முதலில் சமர்ப்பித்தல் வேண்டும்.

முறைப்பாட்டுத் தீர்வின் பெறுபேறு பற்றி நீங்கள் திருப்தியடையாமலிருக்கு மிடத்து நீங்கள் அது பற்றி காப்புறுதி பற்றிய குறைகேள் அதிகாரிக்கு முறைப்பாடு செய்யலாம்.

காப்புறுதி பற்றிய குறைகேள் அதிகாரி
143ஏ, வஜிரா வீதி,
கொழும்பு 5

தொலைபேசி 0114528671–2, பெக்ஸ் 0114528670
மின் அஞ்சல் – info@insuranceombudsman.lk
இணையத்தளம் – www.insuranceombudsman.lk

காப்புறுதி பற்றிய குறைகேள் அதிகாரியுடன் உவாவுதலை மேற்கொண்டதன் பின்னர் உங்களுக்கு மேலும் ஏதேனும் தீர்வு செய்யப்பட வேண்டிய விடயங்கள் இருப்பின் நீங்கள் எப்போதும் இலங்கைக் காப்புறுதிச் சபையுடன் தொடர்பு கொள்ள லாம்.

பணிப்பாள ர் அதிபதி
இலங்கை காப்புறுதிச்சபை
11 ம் மாடி, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம்,
கொழும்பு 1

தொலைபேசி 0112396184-9, பெக்ஸ்: 0112396190
மின் அஞ்சல் - ibsl@eureka.lk
இணையத்தள ம் - www. ibsl.gov.lk

## 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் சட்ட ஒழுங்கு விதியின் கீழ் பதிவு பெற்ற காப்புறுதிக் கம்பனிகள்

| | காப்புறுத்துபவரின் பெயர் | காப்புறுதி வகை | பதிவுத் திகதி |
|---|---|---|---|
| 1. | சிறீலங்கா இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன் லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 1993 பெப்ரவரி 3 ஆந் திகதி |
| 2. | யூனியன் அசூரன்ஸ் பி. எல். சி. | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 1987 சனவரி 8 ஆந் திகதி |
| 3. | சிலிங்கோ இன்சூரன்ஸ் பி. எல். சி. | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 1987 பெப்ரவரி 11 ஆந் திகதி |
| 4. | ஈகிள் இன்சூரன்ஸ் பி. எல். சி. | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 1987 திசெம்பர் 16 ஆந் திகதி<br>1987 திசெம்பர் 29ஆந் திகதி |
| 5 | ஜனசக்தி இன்சூரன்ஸ் பி. எல். சி. | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 1994 ஓகத்து 12 ஆந் திகதி<br>1995 செத்தெம்பர் 11 ஆந் திகதி |
| 6. | கோர்ப்பரேட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 1998 செத்தெம்பர் 18 ஆந் திகதி |
| 7. | ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் பி. எல். சி. | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 2000 மார்ச் 08 ஆந் திகதி<br>1999 செத்தெம்பர் 17 ஆந் திகதி |
| 8. | ஹேய்லீஸ் ஏஐஜீ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி | 1999 திசெம்பர் 13 ஆந் திகதி |
| 9. | எச்.என்.பி. அசூரன்ஸ் பி. எல். சி. | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 2001 ஓகத்து 30 ஆந் திகதி |
| 10. | அமானா ரக்காபுல் பி. எல். சி. | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 2002 பெப்ரவரி 1 ஆந் திகதி |
| 11. | லைவ் இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன் (லங்கா) லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி | 2002 திசெம்பர் 18 ஆந் திகதி |
| 12. | சீமாசகித்த சணச ரக்ஷண சமாகம | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 2003 யூலை 08 ஆந் திகதி<br>2005 சனவரி 6 ஆந் திகதி |
| 13. | அலையன்ஸ் இன்சூரன்ஸ் கம்பனி லங்கா லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி | 2004 செத்தெம்பர் 29 ஆந் திகதி |
| 14. | ஏபிசி இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி பொதுக் காப்புறுதி | 2005 ஏப்ரல் 1 ஆந் திகதி<br>2005 ஓகத்து 2 ஆந் திகதி |
| 15. | சிலிங்கோ ரக்காபுல் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி | 2006 மே 16 ஆந் திகதி |

| | காப்புறுதித் தரகர் | பதிவு செய்வதற்கான காலப்பகுதி | தொழில் வகை |
|---|---|---|---|
| 1. | ஏடீசற் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 2. | அமிற்றி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 3. | ஏஎம்டபிள்யு இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 4. | பிறில்லியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 5 | சிலங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 6. | சியெக்சி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 7. | சிலான் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 8. | சீஎவ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 9. | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 10. | ஈக்குவிற்றி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 11. | ஈசாஜிகரம்ஜி அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 12. | பின்லே இன்சூரன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |

| | | | |
|---|---|---|---|
| *13.* | ஜே இன்சூரன்ஸ் கொன்சல்ரன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *14.* | எல்எம் அன்ட் ஏ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கொன்சல்ரன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *15.* | லக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *16.* | மெக்வுட்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *17.* | மாக்ஸ்வெல் என்ரர்பிறைசஸ் லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *18.* | பிள ாசிட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2007.07.09 – 2008.07.08* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *19.* | புறோகெயர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *20.* | புறொரெக்ஷன் அன்ட் அசூரன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *21.* | றிலயன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2007.03.21 – 2008.03.20* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *22.* | றோ – பா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *23.* | சேனாரத்ன அசோசியேற்ஸ் இன்சூரன்ஸ் லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *24.* | ஸ்ருவாட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2007.09.14 – 2008.09.13* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *25.* | சன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் | *2007.11.13 – 2008.11.12* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *26.* | யுனைட்டட் லைவ் அன்ட் ஜெனரல் அசூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *27.* | வெராசிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *2008.01.01 – 2008.12.31* | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |

| | | | |
|---|---|---|---|
| 28. | விக்ரர் இமானுவேல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 29. | விசன்வைட் இன்சூரன்ஸ் புரோக்கறிங் அன்ட் பினான்சியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 30. | வோ லங்கா இன்சூரன்ஸ் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 31. | செனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | நீண்டகாலக் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| 32. | அலியோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2007.11.15 – 2008.11.14 | பொதுக் காப்புறுதி |
| 33. | சீஎஎல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2007.12.31 – 2008.12.30 | பொதுக் காப்புறுதி |
| 34. | டீபி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | பொதுக் காப்புறுதி |
| 35. | இன்ட்கொம் இன்டஸ்றியல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | பொதுக் காப்புறுதி |
| 36. | கோஷிபா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | பொதுக் காப்புறுதி |
| 37. | ஸ்ரிராரெஜிக் சொலூசன்ஸ் இன்சூரன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | பொதுக் காப்புறுதி |
| 38. | யுனைட்டெட் இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 2008.01.01 – 2008.12.31 | பொதுக் காப்புறுதி |
| 39 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 18.01.2008 – 31.12.2008 | பொதுக் காப்புறுதி |
| 40 | ஆக்கேடியா இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 01.02.2008 – 31.12.2008 | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |

| | | | |
|---|---|---|---|
| *41* | கொமேர்ஷல் இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *01.01.2008 – 31.12.2008* | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *42* | லங்கா ஒறிக்ஸ் இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் லிமிட்டெட் | *01.01.2008 – 31.12.2008* | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *43* | இன்டஸ்றியல் அன்ட் கொமேர்ஷல் இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *07.01.2008 –31.12.2008* | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *44* | இன்சுரெக்ஸ் இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | *01.01.2008 – 31.12.2008* | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *45* | இன்ரர் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *08.01.2008 – 31.12.2008* | பொதுக் காப்புறுதி |
| *46* | ஜே.எவ். இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *01.01.2008 – 31.12.2008* | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *47* | நேஷன்ஸ் இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *16.01.2008 – 31.12.2008* | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *48* | வனிக் இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *01.04.2008 – 31.08.2008* | பொதுக் காப்புறுதி |
| *49* | வேர்டெக் இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | *14.02.2008 – 31.12.2008* | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *50* | கொலம்பு இன்சூரன்ஸ் புரொக்கர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் | *12.02.2008 – 11.02.2008* | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *51* | ஆக்கடியா இன்சூரன்ஸ் புரொக்கர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் | *01.02.2008 – 31.02.2008* | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |
| *52* | ஸ்ரிராடஜிக் இன்சூரன்ஸ் புரொக்கர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் | *24.03.2008 – 23.03.2008* | நீண்டக்கால காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும் |

# கோரிக்கை மறுப்பு

இத்த ஆவணமானது பொதுத்தகவல்களை தருவதற்கு மட்டுமே. கொடுக்கப்பட்ட தகவல்கள் குறித்த விடயத்தைப் பற்றி விரிவான அலோசனைகளை கொண்டிருக்கவில்லை என்பதோடு இதை சட்ட ஆலொசனைக்கு ஓப்பானதாக பாவித்தல் ஆகாது.